**செய்தி வெளியீடு எண்: 295** **நாள்: 03.06.2013**

**கூட்டுறவுச் சங்கங்களுக்கான இரண்டாம் நிலைத் தேர்தல் 2272 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்வு**

**மாநிலத் தேர்தல் ஆணையர் அறிவிப்பு**

தமிழகத்தில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கான இரண்டாம் நிலைத் தேர்தலில் 2272 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு.ம.ரா. மோகன், இ.ஆ.ப., (ஓய்வு) தெரிவித்துள்ளார். இது சம்மந்தமாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

**இரண்டாம் நிலைத் தேர்தல்**

தமிழகத்தில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், கூட்டுறவு நூற்பாலைகள், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் இணையங்கள் உள்ளிட்ட 198 கூட்டுறவுச் சங்கங்களுக்கு இரண்டாம் நிலையில் தேர்தல் நடைபெறும் என கடந்த 9.5.2013 அன்று கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டிருந்தது. இதற்கான தேர்தல் அட்டவணையும் அன்றே ஆணையத்தால் வெளியிடப்பட்டிருந்தது. இதன்படி இந்த 198 சங்கங்களில் வேட்பு மனுத்தாக்கல் 28.5.2013 அன்று நடைபெற்றது. 29.5.2013 அன்று மாலை 4.00 மணி வரை வேட்பு மனுக்கள் திரும்பப் பெற கால அவகாசம் அளிக்கப்பட்டது.

**போட்டியின்றி தேர்வு**

வேட்பு மனுக்கள் திரும்பப் பெறுவதற்கான கால அவகாசம் முடிவடைந்ததும் 185 சங்கங்களில் 2272 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் 1222 பேர் தனி நபர்கள் தொகுதியிலிருந்தும், 1050 பேர் சங்க பிரதி நிதிகளுக்கான தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மொத்தம் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 2272 நிர்வாகக் குழு உறுப்பினர்களில் 410 பேர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இட ஒதுக்கீட்டின் கீழும், 665 பேர் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழும், 1197 பேர் பொதுப்பிரிவின் கீழும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## போட்டியுள்ள சங்கங்கள்

இரண்டாம் நிலைத் தேர்தல் நடைபெறும் 198 சங்கங்களில் இரண்டு சங்கங்களில் யாரும் வேட்பு மனு தாக்கல் செய்ய முன்வரவில்லை. மீதம் இரண்டு சங்கங்களில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையால், வேட்பு மனுத்தாக்கல் நடைபெறவில்லை. மீதமுள்ள 194 சங்கங்களில் 185 சங்கங்களில் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள 9 சங்கங்களில் மட்டுமே நிர்வாகக் குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறவுள்ளது.

## தேர்தல் நாள்

இரண்டாம் நிலைத் தேர்தலில் 9 சங்கங்களில் 80 நிர்வாகக் குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் வரும் 5.6.2013 அன்று நடைபெறவுள்ளது. இதற்காக 204 பேர் களத்தில் உள்ளனர்.

## தலைவர் / துணைத் தலைவர் தேர்தல்

இரண்டாம் நிலைத் தேர்தலில் இடம் பெற்றுள்ள 194 சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கூடி தங்களுக்குள் தலைவர் / துணைத் தலைவரை தேர்ந்தெடுக்க உள்ளனர். இதற்கான தேர்தல் வரும் 10.6.2013 அன்று நடைபெறவுள்ளது.

## பதவியேற்பு

இரண்டாம் நிலைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் 11.6.2013 செவ்வாயன்று பதவியேற்க உள்ளார்கள்.

## மூன்றாம் நிலைத் தேர்தல்

மூன்றாம் நிலையில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ.ஆப்டெக்ஸ்) உள்ளிட்ட 83 சங்கங்களுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கான தேர்தல் அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும்.

மேற்கண்டவாறு கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு.ம.ரா. மோகன், இ.ஆ.ப., (ஓய்வு) தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆணையர்

<u>கூட்டுறவுச் சங்கங்களுக்கான இரண்டாம் நிலைத் தேர்தல் நிர்வாகக் குழு உறுப்பினர் தேர்வு</u>

| வ.எண் | மாநிலத் தேர்தல் அலுவலர் | தேர்தல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட சங்கங்கள் | வேட்பு மனு பெறப்படாததால் தேர்தல் நடை பெறாத சங்கங்கள் | நிர்வாகக்குழு உறுப்பினர்களை போட்டியின்றி தேர்ந்தெடுத்த சங்கங்கள் | போட்டி ஏற்பட்டதால் தேர்தல் நடை பெறவுள்ள சங்கங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 113 | 0 | 111 | 2 | 113 |
| 2 | தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர் | 10 | 0 | 9 | 1 | 10 |
| 3 | மீன் வளத்துறை இயக்குனர் | 12 | 2 | 7 | 3 | 12 |
| 4 | கதர் கிராமத் தொழில் வாரிய முதன்மை செயல் அலுவலர் | 1 | 1 | 0 | 0 | 1 |
| 5 | கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குனர் | 20 | 0 | 20 | 0 | 20 |
| 6 | பால்வளத் துறை ஆணையர் | 17 | 0 | 17 | 0 | 17 |
| 7 | பனை வெல்ல அபிவிருத்தி வாரிய முதன்மை செயல் அலுவலர் | 8 | 0 | 6 | 2 | 8 |
| 8 | சமுக நலத்துறை ஆணையர் | 1 | 0 | 1 | 0 | 1 |
| 9 | சர்க்கரைத் துறை இயக்குனர் | 16 | 1 | 14 | 1 | 16 |
| | மொத்தம் | 198 | 4 | 185 | 9 | 198 |

ஆணையர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**